www.tamilarangam.net

# பயிற்சி முகாம்கள் அல்ல வதை முகாம்கள்

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தில் வளர்ந்துவரும் அராஜகமானது தாபனத்தினுள்ளும், வெளியிலும் மிக மோசமான தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றது. தாபனத்திற்கு வெளியான அதன் நடவடிக்கைகள் சுழிபுரத்தில் நடைபெற்ற விடுதலைப்புலி இயக்கத்தோழர்கள் அறுபேர்களின் கொலைகளை அடுத்து அம்பலமானது. இன்றுவரை வெளியே தெரியவராத கழக பயிற்சிமுகாம் படுகொலைகளையும், சித்திரவதைகளையும் தமிழீழ அபிமானிகள், கழகத்தின் ஆதரவாளர்கள், முற்போக்கு ஜனநாயகசக்திகளின் முன்வைப்பதே இந்த பிரசுரத்தின் நோக்கமாகும்.

## வதை முகாம்கள்

### 4ம் மாடி

பயிற்சி முகாம்

' B ' மிற்கு அருகிலுள்ள சவுக்குத்தோப்பொன்றில் 4ம் மாடி என்ற பெயரில் ஒரு வதை முகாம் பெப்ரவரி, 84ல் ஆரம்பிக்கப்பட்டது. அப்போது பரந்தன் ராஜன் (ஞானசேகரன்) என்பவர் பயிற்சி முகாம்களின் பொறுப்பாளராக இருந்தார்.

அதில் சித்திரவதைகளுக்கு மூர்த்தி பொறுப்பாளராக இருந்தார். இவருடன் குகன், மதன், கஜன், கிளைட், சவுதி, சண்முகம், (பாமோட்டை சிவம்) ஆகியோர்கள் செயற்பட்டார்கள்.

கழகத்தினுள் எதிரிகள், அரச உளவாளிகள் ஊடுருவுவதை கண்டுபிடிப்பதற்காக தாம் செயற்படுவதாக கூறிக்கொண்டார்கள். பொதுமக்களில் பலரை அரச உளவாளிகள் என்று சந்தேகிப்பதாக கைதுசெய்து சித்திரவதை செய்துள்ளார்கள். சிலர் கொல்லப்பட்டும் இருக்கிறார்கள்.
பயிற்சிக்காக முகாம்களுக்கு வரும் தோழர்கள் யாராவது மிகத்திறமையாக பயிற்சிகளைச் செய்வார்களேயானால் இவர்களுக்கு அந்த தோழர் முன்னமே வேறு எதாவது இயக்கத்தினரால் பயிற்றுவிக்கப்பட்டபின்பு கழகத்தினுள் ஊடுருவ அனுப்பியிருப்பார்களோ என்ற சந்தேகம் எழுந்துவிடும். உடனடியாக அவர் 4ம் மாடிக்கு அழைத்துச்செல்லப்படுவார். இராணுவத்தில் சேர்ந்தவன் தப்பியோடுவது என்பது ஒழுங்கமைக்கப்பட்ட முதலாளித்துவ ராணுவத்திலேயே வழமையானது. அது போலவே கழகப் பயிற்சி முகாம்களில் பலர் பயிற்சிகளின் கடினம் காரணமாகவும், பயிற்சி வழங்கும் தோழர்களின் தவறான அணுகுமுறை காரணமாகவும், குடும்பக்கவலை, தாம் எதிர்பார்த்து வந்தது கிடைக்காத ஏமாற்றம் போன்ற பல காரணங்களால் தப்பியோடுகிறார்கள். அப்படி தப்பியோடுபவர்களை கைதுசெய்யும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பட்சத்தில் அவர்கள் அரச உளவாளிகள் என்னும் குற்றச்சாட்டில் விசாரிக்கபடுகின்றார்கள். இந்தவிசாரணையின்போது அவர்கள் தமக்கு உதவியதாக கூறும் ஏனையதோழர்களும் 4ம் மாடிக்குஇட்டுச் செல்லப்படுகின்றனர்.

ராஜன் தட்சணாமூர்த்தி என்ற பண்ணையாரை சுட்டுக்கொன்றதைத் தொடர்ந்து பொலிசாரால் தேடப்பட்டார். அப்பொழுது பொலிசார் பயிற்சிமுகாம்களுக்குள் நுழையலாம் எனப்பயந்து இந்த 4ம் மாடி கலைக்கப்பட்டது. இது பற்றி மத்தியகுழுவில் உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளுக்கு உமாமகேஸ்வரன் அப்படியொன்றுமே நடக்கவில்லை என்று சாதித்தார்.

"எமது இராணுவம் சிறிலங்கா ராணுவத்தைவிட மோசமானது. முன்பொருதடவை நான் தமிழீழத்தில் கழக சுவரொட்டிகளுடன் கைதாகி சிங்களராணுவ முகாமில் வைக்கப்பட்டிருந்தேன். என்னை கடுமையாக பொல்லால் அடித்து என்னிடமிருந்து உண்மையை கறக்க முயன்றார்கள். அவர்களுடைய சித்திரவதையில் அவர்களை பொறுத்தவரை ஏதோ ஒரு நியாயம் இருப்பதாகவே எனக்குத் தோன்றியது. ஆதலால் அதைப் பற்றி ஆத்திரப்படவில்லை. 4 நாட்களின் பின்பு விடுதலையானேன்."

ஆனால் எமது கழக இராணுவத்தினர் டாரோ பயிற்சி முகாமில் இருந்து தப்பிச்செல்ல நான் உதவியிருக்கலாம் என சந்தேகத்தின் பேரில் கைது செய்தவர்கள் 4ம் மாடியில் அவர்கள் எனக்குச் செய்த சித்திரவதைகள் சிங்கள இராணுவத்தைவிட மோசமானது, கேவலமானது:
எனது மலவாசலுக்குள் போத்தலைப் புகுத்தினார்கள், என்னை இன்னோர் சக தோழரின் ஆணுறுப்பை சூப்பும்படி கூறி அதனை சுற்றியிருந்து ரசித்தார்கள். இது மிக மோசமான மனநோய். அந்த சித்திரவதைகள் நடந்து 6 மாதங்களுக்கு மேலாகியும் கூட என்னால் இரவில் நிம்மதியாக நித்திரைகொள்ள முடியவில்லை. சொல்லுங்கள், தோழரே உண்மையிலேயே எமது இராணுவம் விடுதலையை நோக்கித்தான் செல்கிறதா? என்று கேட்டார்.

இப்போது கூட அந்த தோழர் பயிற்சி முகாமிலேயே உள்ளார். அவர் இப்போது அரை மனநோயாளி அடிக்கடி தன்னை மறந்து தனக்குள் சிரித்துக்கொள்வார். எங்கோ ஓர் தூர இடத்தை வெறித்துப் பார்த்துக்கொண்டேயிருப்பார்.

இவ்வாறு சித்திரவதை அனுபவித்ததினால் அவ்வாறு சித்திரவதை செய்து கொண்டிருப்பதை பார்த்ததினால் பைத்தியமானோர் ஆறு பேருக்கும் அதிகம்.

சித்திரவதை செய்பவர்கள் ராஜன், செந்தில், கந்தசாமி, பாபுஜி, வாமதேவன், மாணிக்கம் தாசன், ஆகியோர் டெனிம்நீளக் காற்சட்டை, சப்பாத்து அணிந்து "புளட்" மோட்டார் சைக்கிளில் பயிற்சி முகாமிற்கு செல்வது வழமை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



, இப்போது கூட பயிற்சிமுகாம்களிலுள்ள சில ருக்கு "புளட்" மோட்டார்சைக்கிள் சத்தத்தை கேட்டால் கை, கால்கள் தானாகவே நடுக்கமெடுக்கும். தங்களையறியாமலேயே சிறுநீர் கழிப்பார்கள். இன்னும் சிலர் தாடி வைத்த டெனிம் அணிந்த யாரைக்கண்டாலும் பயந்து ஓடுமளவிற்கு மனோவிகாரமடைந்துள்ளார்கள் என்றால் சித்திரவதையின் தன்மையை புரிந்துகொள்ளலாம்தானே.

உளவுப்படை - சென்னைமுகாம்
-----------------------

உமாமகேஸ்வரனின் நேரடிகட்டுப்பாட்டில் வாமதேவனின் பொறுப்பில் ஏற்பட்டது. இவர் உடன் கூடவே காந்தி, உதயன், ஜிம்மி, பிறவுன், றொபேட் ஆகியோர் பணியாற்றி வந்தார்கள்.

சென்னையில் ஒருவீட்டை வாடகைக்கு அமர்த்தி அரச உளவாளிகள் என சந்தேகிக்கும் பலரை கைதுசெய்து சித்திரவதை செய்தார்கள். ராஜ்மோகனின் கொலை க்கு இவர்களே பொறுப்பு. இவரின் கொலையடுத்து பொலிசார் இந்த வீட்டிற்கு வரலாம் எனக்கருதி அந்த வீட்டை மாற்றினார்கள்.

இவர்களின்கீழ் வைக்கப்பட்டிருந்த பெண்மணி ஒருவர் (விசாரணைக்காக) இவர்களால் பல தடவை கற்பழிக்கப்பட்டதாக பின்பொருதடவை குற்றஞ்சாட்டினார்.

பின்பு இதில் செயல்பட்ட பிறவுன், ஜிம்மி வாமதேவனின் மனைவியுடன் பாலியல் தொடர்பில் ஈடுபட்டது அம்பலமாகவே, இவர்களை பயிற்சி முகாம்களுக்குஅனுப்பிவிட்டே இந்த கிளை மூடப்பட்டது.
தோழர் அற்புதம் நடக்கமுடியாது இருந்தபோது கழகநடவடிக்கைகளிலிருந்து ஒதுங்கியிருந்தார். அக்காலத்தில் இவரை நயவஞ்சகமாக பாபுஜி, செந்தில் ஆகியோர் அழைத்து வந்து ஒரு அறையில் வைத்திருந்தார்கள். அவரை கொல்வதற்கு சதிநடப்பதை சந்தேகமுற்று கைத்தடியை ஊன்றிபடி வெளியேறிச்சென்றார். பின்பு ஏனையதோழர்களின் எதிர்பு காரணமாக அவருடன் உமாமகேஸ்வரன் சமரசம் செய்து அப்படியெதுவுமே நடக்கவில்லையென்று கூறி அழைத்துவந்தார். இப்போது அவர் கழகத்திலேயே பணியாற்றுகிறார். அவருக்கு பின் பின்னப்பட்ட சதிவலை முழுவதையும் அவர் அறிந்திருப்பாரோ என்னவோ?

மொ சா ட்.
-----------

செப்டெம்பர், 84ல் உமாமகேஸ்வரனின் நேரடிக்கட்டுப்பாட்டில் கந்தசாமியின் பொறுப்பில் கழக உளவுப்படை பெரியளவில் மீண்டும் செயற்படத்தொடங்கியது. இவர்கள் தங்களையே "மொசாட்" என அழைத்துக்கொண்டார்கள். கந்தசாமி பொறுப்பாளராகவும் வாமதேவன் அவரின் உதவியாளராகவும் ஏற்பட்டனர்.

இவர்களது தலைமையின்கீழ் சென்னையில் தயாளனின் தலைமையில் ஒரு பிரிவும், பயிற்சி முகாமில் மூர்த்தியின்தலைமையில் ஒரு குழுவாகவும் இயங்கினர்.

சென்னையில் இருந்த குழு சென்னையில் வேலைசெய்த பல கழகத்தோழர்களை உளவு பார்க்கவும், கழகத்திலிருந்து பிரிந்துசென்ற பலரை கடத்தும் நோக்கத்துடனும் பின் தொடரும். சிவனேஸ்வரன், அகிலன் போன்றோரின் கடத்தலுக்கும், திருமதி. நவரத்தினம் கடத்தல் முயற்சிக்கும் பொறுப்பானவர்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



டேவிற் ஐடா, சந்ததியார் போன்றோரை கடத்துவதற்கும் கொலை செய்வதற்கும் இவர்களிடம் திட்டம் இருந்தது.

பயிற்சி முகாம்

8 ' யில் விசேட சித்திரவதைமுகாம் முட்டாள்மூர்த்தி தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. இந்த உளவுப்படையில் இருந்தவர்கள் மிகவும் அறிவுகுறைந்த அலகோசுகள். இவர்களால் உண்மையை தந்திரமாக பெறத்தெரியாது. தெரிந்ததெல்லாம் தங்கள்கையில் அகப்பட்டவர்களை மோசமாக தாக்குவதும், அவர்களிடமிருந்து தாம் விரும்பியவாறு வாக்குமூலங்களை பெறுவதுமாகும். பலர் அடித்த அடியிலேயே விசாரணைகளை ஆரம்பிப்பதற்கு முன்பே மரணித்துள்ளனர்.

மிக மோசமான சித்திரவதைகளை இவர்கள் சிரித்துக்கொண்டே செய்து முடிப்பார்கள். தடிகளால் மயங்கும்வரை அடிடித்தல், மயங்கியவர்மேல் வாளியால் தண்ணீரை ஊற்றுதல், மிளகாய்தூள் போடுதல், முதுகுதோலைகிழித்து மிளாகாய்தூளை தடவுதல், போத்தலை மலவாயினுள் செலுத்துதல், வாயினுள் மரக்கட்டையை அடித்து இறக்குதல், கைபெருவிரல்களில் ஆளை கட்டி நீண்டநேரம் தொங்கவிடுதல், நகங்களை பிடுங்குதல், தலைகீழாக உளன்றியில் (உமாமகேஸ்வரனின் தாய தமிழில் கப்பியை உளன்றி என்று கூறுவர்) ஏற்றுதல், கம்பியை ஆணுறுப்பினுள் செலுத்துதல் மற்றும் பாலியல்ரீதியான சேட்டைகள் எனபன இவற்றிற் சிலவாகும்.

மூர்த்தி, ரவி, குகன்...ஆகியோர் இவற்றிற்கு நன்கு அநுபவம் வாய்தவர்கள்.

4ம் மாடி காலத்தில் சித்திரவதைகளுக்கு பின்பு தோழர்களை நிரபராதிகள் எனக்கண்டால் விடுதலை செய்வது வழமை. ஆனால் பிற்பட்டகாலத்தில் விசாரணைக்கு சென்றவர் நிரபராதியெனக்கண்டபோதும் கூட வெளியில் விடப்படுவதில்லை. எனெனில் தங்கள் சித்திரவதை பற்றிய தகவல்கள் வெளியில் வந்துவிடும் என்றபயமே. ஆதலால் ஒரு தோழர் விசாரணைக்கு என்று அழைத்துச்செல்லப்பட்டால் அவருக்கு மரணதண்டனை நிச்யமானது. இவ்வாறு அவர்கள் கொல்லப்பட்ட பின்புகூட பெற்றோர்களுக்கோ, சகதோழர்களுக்கோ, மத்திகுழுவிற்கோ எக்காரணம் கொண்டும் அப்படி நடக்கவில்லை என்றே கூறிவருகின்றனர். யாராவது கேள்வி கேட்டால் தப்பியோடிவிட்டதாக, பயிற்சி முகாமில் இருப்பதாக, வெளிநாட்டு பயிற்சிக்கு சென்றுவிட்டதாக அல்லது இயக்கத்தை விட்டு வெளியேறி விட்டதாக கூறிவிடுவார்கள்.

4ம் மாடிகாலத்தில் இவர்கள் புதைத்த சில சடலங்கள் நாய்களால் கிண்டப்பட்டு வெளியில் கிடந்தன. இப்போதெல்லாம் பிரேதங்களை மறைப்பதில் தேர்சி பெற்றுவிட்டார்கள். சித்திரவதை கூடத்திற்கு அருகில் சுற்றிவரமுள்ள சவுக்கு தோப்புக்களே இரவில் இவர்கள் கொலை செய்தவர்களை புதைக்கும் இடங்களாகும். இப்போதுகூட கிண்டிப்பார்தால் அங்கு எலும்புக்கூடுகள் கிடைக்கும்.

இன்றுவரை இந்த வதைமுகாம் இயங்கிக்கொண்டே இருக்கின்றது. இவர்கள் ஒரு மாதத்தில் மட்டும் கொலை செய்தவர்களின் எண்ணிக்கை 30என வாமதேவன் ஒரு தோழர்கு கூறியுள்ளார். ஆதலால் இன்றுவரை8மாதத்திற்கு மேலாக இயங்கிவரும் இவர்கள் எவ்வளவுபேரை கொலை செய்திருக்கலாம் என ஊகிக்கலாம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இதுவரை இவர்களால் விசாரணைக்கென பலர் அழைத்துச்செல்லப்பட்டதை அறிவோம். ஆனால் இதுவரை உயிருடன் வெளியில் வந்தவர்கள் 5பேர் மட்டுமே.

கழகத்தின் சென்னைஅலுவலகத்தில் காசி, மைக்கல் ஆகிய இரு தோழர்கள் நீண்டகாலமாக விசுவாசமாக உழைத்தவர்கள். இவர்கள்மீது உளவுப்படையைச் சேர்ந்த சவுதி, மூர்த்தி, தயாளன், கந்தசாமி ஆகியோருக்கு தனிப்பட்ட ஆத்திரங்கள் இருந்தன. கழகத்திலிருந்த குழப்ப நிலைமைகளை பயன்படுத்தி, இவர்களை தோழர் வசந்தனுக்கு சார்பானவர்களெனவும், புலிகளுக்கு தகவல் தெரிவிப்பவர்களெனவும் உமாமகேஸ்வரனிடம் முறையிட்டனர்.

பெப்பிரவரி,6,85 இல் நடைபெற்ற கட்டுபாட்டுக் குழுக்கூட்டத்தில் உமாமகேஸ்வரன் இதுபற்றி குறிப்பிட்டபோது "இவர்கள் பல காலம் நம்பிக்கையாக உழைத்தவர்கள்தான். ஆனால் அவர்கள் சந்தேகிக்கின்றார்கள் ஆதலால் விசாரிப்பது தவிர்கமுடியாது. ஆனால் விசாரணையில் சில வேளைகளில் இவர்கள் நிரூபணமானாலும் கூட விடுதலைசெய்யமுடியாதே என்று தான் யோசிக்கிறேன் " என்று கூறினார்.

இந்த உளவுப்படை கழகத்தின் கட்டுபாட்டிற்கோ, மத்தியகுழுவிற்கோ தெரியாமல் இயங்குவதாகும். இவர்கள் எந்த குழுவிற்கோ அறிக்கை சமர்பிப்பதோ கிடையாது. ஆனால் மத்தியகுழு உறுப்பினர்களையே இது மிரட்டுமளவிற்கு அதிகாரம் படைத்தது. இதன் நடவடிக்கைகள் அனைத்திற்கும் உமாமகேஸ்வரனே தனிப்பொறுப்பு எடுக்கவேண்டும்.

'B' முகாமிலுள்ள "மொசாட்" கொட்டகையில் 9 அறைகள் கட்டப்பட்டு இருந்தன. இவை முழுக்கமுழுக்க இருட்டாக இருக்கும். ஒவ்வொன்றும் 6×4½ விஸ்தீரணமுள்ளது. சிறுநீர் அறையின் ஒரு மூலையிலேயே தரையில் கழிக்கவேண்டும். மலம் கழிப்பதற்கு மாத்திரம் முகாமில் சிறை வைக்கப்பட்டிருக்கும் பாலசுப்பிரமணியம் என்ற ஒருவன் காலையில் ஒரு பாத்திரத்தை கொண்டுவருவார். நித்திரைகொள்ள முடியாதபடி அறையில் மோசமான மணம் வீசும்.

கொட்டகையினுள் அடைக்கப்பட்டு இருப்பவர்கள் 24மணி நேரமும் விலங்கிடப்பட்டு இருப்பார்கள். கால்கள் இரண்டும் பிணைக்கப்பட்ட நிலையில் கைகள் இரண்டும் பின்புறமாக விலங்கிடப்பட்டு இருக்கும். மலம் கழிப்பதற்கும், உணவு உண்பதற்கும் மாத்திரமே விலங்குகள் தளர்தபடும். கையும், காலும் விலங்கிடப்பட்ட நிலையில் தோழர்கள் சிறுநீர் கழிப்பதற்கு மிகவும் கஷ்டப்படுவார்கள். கையும், காலும் விலங்கிடப்பட்ட நிலையில் உறங்கவும் முடியாது.

கொட்டகையிலுள்ள அறைகள் ஒவ்வொன்றிற்கும் இலக்கங்கள் இடப்பட்டுள்ளன. 3,5,7...,75 எ.னபனவாகும். இதில் அவர்களுக்கு வாய்ப்பு என்னவென்றால் இந்த இலக்கங்கள் கைதி இலக்கங்கள் என அழைக்கபட்டாலும், உண்மையில் கொட்டகை இலக்கங்களே. ஒரு கைதி குறிப்பிட்ட கொட்டகையில் அடைக்கப்பட்டுள்ளவரை அந்த இலக்கங்களால் அழைக்கப்படுவார். அவரை கொலை செய்தபின்பு அந்த கொட்டகைக்கு வரும் புதியவரும் அதே இலக்கத்தால் அழைக்கப்படுவார். பயிற்சி முகாம் 'B' யிலுள்ளவர்கள் புதியவர்கள். அவர்களுக்கு இ.க்கொட்டகையில் இருப்பவர்கள் இலங்கை அரச உளவாளிகள் என தெரிவிக்கப்பட்டிருக்கும். தொடர்ந்து கைதிகள் இலக்கங்கள் மாறாததால் அப்புதியவர்கள், ஒரே நபர்கள்தான் தொடர்ந்தும் அடைக்கப்பட்டிருக்கிறார்கள் எனக்கருதிக்கொள்வார்கள். ஆதலால் பழையவர்கள் கொலைசெய்யபட்ட பின்பு இரவில் அந்த கொட்டகைக்கு புதியவர்களை கொண்டுவருவதை இத்தோழர்கள் அறியமாட்டார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பகல்முழுவதும் சித்திரவதை அதிகாரிகள் உறங்குவார்கள். வெளியில் ஆயுதங்களுடன் காவல்காரர்கள் நிற்பார்கள். இரவு 10மணிக்கு மேல் சித்திரவதை விசாரணை ஆரம்பமாகும். இந்த விசாரணை அதிகாலை 4மணி வரை நடைபெறும். இந்த சித்திரவதைகளின் போது கைதிகள் போடும் அலறல் முழுபயிற்சி முகாமையுமே அதிரவைக்கும். இந்த ஒலியே பல தோழர்களை நடுங்கவைத்து மனநோயாளி ஆக்கியுள்ளது.

ஒரு சித்திரவதை அதிகாரி தமது வாழ்கைபற்றி பின்வருமாறு கூறினார். "எமக்கு என்னடா சாப்பிடுவதும், படுப்பதும், அடிப்பதும் தானே வேலை".

சித்திரவதைக்கூடத்தில் காவலிருக்கும் தலைமை காவலாளி 1/2மணிக்கு ஒரு தடவை "தமிழீழ மக்கள் விடுதலைக் கழக கைதிகள், துரோகிகள் இலக்கம் 3,5,7... என சத்தமிடுவார். அதற்கு ஒவ்வொரு கைதியும் ஆஜர் என குரல் கொடுக்க வேண்டும். குரல் கொடுக்க மறுப்பவர் தாக்கப்படுவார். இது தொடர்ந்து 24மணி நேரமும் நடைபெறுவதால் கைதிகள் தூங்கவேமுடியாது.

இந்த முகாமிற்கு ஒருவர் கொண்டுவரப்பட்டவுடன் தலைகீழாக கட்டி தொங்கவிடப்பட்டு குதிக்காலில் பொல்லுகளால் குதிக்காலில் இரத்தம் வரும்வரை அடிப்பார்கள். அவர் தப்பியோடமாட்டார் என உறுதிசெய்யவே இந்நடவடிக்கையாகும். அதன் பின்பே விசாரணை ஆரம்பமாகும். ஒவ்வொரு இரவும் விசாரணை கூடத்திற்கு விசாரணை கைதிகள் தூக்கிச்செல்லப்படுவார்கள். ஏனெனில் அவர்கள் நடக்க முடியாத நிலையிலிருப்பார்கள்.

விசாரணைகள் செய்பவர்கள் முட்டாள்களாக இருப்பதால் தந்திரமாக உண்மையை எடுப்பதிலும் பார்க கைதிகளை அடித்து நொறுக்கி தாம்விரும்பியவாறு ஒப்புதல் வாக்குமூலம் பெறவே முனைவார்கள். இந்தவாக்கு மூலங்கள் கழகத்தின் மத்திய குழுவில் உமாமகேஸ்வரனுக்கு எதிராக செயற்படுபவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களாக வைக்கப்படும்.

இங்கு சித்திரவதை செய்பவர்கள் ஆரம்பத்தில் இதனை ஒரு கடமையாக கருதி செய்தார்கள். ஆனால் தற்பொழுது பிறரை சித்திரவதைச் செய்து இன்பம் காணும் மனோவிகாரம் அடைந்தவர்களாக மாறிவிட்டார்கள்.

சித்திரவதையின் போதுகைதிகள் அலறும் குரல்கேட்டு சிரிப்பார்கள். நிர்வாணமாக தலைகீழாக கட்டி பொல்லுகளால் அடிக்கும்போது அடி விதையில் பட்டு உடனடியாக கைதியின் ஆணுறுப்பு முழுவதுமே வீங்கிவரும் இதுஅவர்கள் மிகரசித்து பார்க்கும் காட்சி. சித்திரவதையின் போது தங்களை ஐயா, சேர் எனஅழைக்க நிர்பந்திப்பார்கள். சமுதாயத்தில் ஒருகாலமும் நன்மதிப்பை,கௌரவத்தை பெற்றிருக்காத இவர்களுக்கு சித்திரவதைதாங்காமல் கைதிகள் இவ்வாறு அழைப்பது மகிழ்ச்சியளிப்பது எதிர்பார்க்கக்கூடியதுதானே.

வாமதேவன், கந்தசாமி ஆகியோர் இந்தமுகாமிற்கு சென்றால் உடனடியாக கைதிகளிடம் செல்லமாட்டார்கள். முதலில் தமது கையாட்களை அனுப்பி கைதிகளை மோசமாக தாக்கச் சொல்வார்கள். அவர்கள் சித்திரவதை செய்யப்படும்போது அப்போதுதான் செல்பவர்கள் போல் உள்நுழைவார்கள். அப்போது கையாட்கள் "ஐயாவின் காலில் விழடா" எனக் கைதிகளை மிரட்டி அவர்களின் கால்களில் விழுந்து வணங்கச்செய்வார்கள். சக தோழன் தனது காலில் விழுந்தும்பிட்டு "ஐயா" என அழைப்பதில் மகிழ்சியுறுகிறார்கள் என்றால் இதுவொன்றே போதும் இவர்களது கொடூரத்தன்மையை விவரிப்பதற்கு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


பாதிக்கபட்டவர்கள்

இங்கு பாதிக்கபட்டவர்களது சில விபரங்களை தருகின்றோம். இது தோழர்கள் எவவாறு பயிற்சிமுகாம்களில், வதைமுகாம்களில் நடாத்தப்படுகிறார்கள் என்பதற்கு சான்றாகும். இவை வதைமுகாமில் சித்திரவதை அநுபவித்து தப்பிவந்த, சித்திரவதைகளை நேரில் பார்த்தபின்பு வெளியேறி எம்முடன்வந்த தோழர்களிடமிருந்து பெறப்பட்ட தகவல்களாகும்.

பயிற்சி முகாமின் குறைபாடுகளை
மகஜராக கொடுத்தவர்கள்.

கடல் கடந்து பயிற்சி பெறுவதற்காக அதிக எதிர்பார்புகளுடன்; அதிக நம்பிக்கையுடன் வந்த தோழர்கள் இங்கு பயிற்சிமுகாம்களில் நடைபெறும் அராஜகமும், சித்திரவதைகளும் கொண்ட பயங்கரமான வாழ்க்கையை கண்டு மனமுடைந்து போனார்கள். தமது அடிப்படை உரிமைகள் எதுவும் மதிக்கபடாததும் மட்டுமல்லாமல் பயிற்சிமுகாம்களுக்கு பொறுப்பாக இருந்தவர்கள் முதலாளித்துவ ராணுவ அதிகாரிகள் போன்று அதிகார தோரணையில் கீழணித்தோழர்களை கேவலமாக நடாத்தியும், தரக்குறைவாக நடாத்தியும் வந்தார்கள். பயிற்சிமுகாமிலுள்ளோர் கடினமான வாழ்கையை வாழும்போது பயிற்சி முகாம்களுக்கு வெளியிலுள்ள இந்த ராணுவத்தலைவர்கள் ஆடம்பர உல்லாச கேளிக்கைகளில் ஈடுபடுவதைக் கண்டார்கள்.

இந்தச் சம்பவங்கள் யாவும் செயலதிபர் உமாமகேஸ்வரனுக்கு தெரியாமல் நடைபெறுவதாக கருதி அவற்றை அவருக்கு எடுத்துரைக்கும் வகையில் ஒரு முகாமில் அரசியற் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்த (110) தோழர்களுமாகச்சேர்ந்து தமது கருத்துக்களை தொகுத்து ஒரு மகஜரை செயலதிபருக்கு அனுப்பிவைத்தார்கள். இதற்கு அங்கு அரசியல் ஊழியராக பணியாற்றிய தோழர். தங்கராசாவின் உதவியினால் அதன் பிரதிகள் கழகத்தின் பல முக்கிய உறுப்பினர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.
அந்த மகஜர் வருமாறு.

'எச்' முகாம்,

10,8,1984.

செயலதிபர் தோழர் முகுந்தன் அவர்கட்கு,
தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் அரசியல் துறைச் செயலாளர்
தோழர் வசந்தன் அவர்கட்கு,

பிரதிகள்:-

தோழர் கண்ணன்
தோழர் ராஜன்
தோழர் வாசுதேவா
தோழர் தங்கராசா
தோழர் அன்ரன் ('எச்' முகாம் பொறுப்பாளர்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இயக்கத்தில் தோழர்களால் அனுப்பப்படும் இயக்க நடைமுறை
குறைபாட்டு புனரமைப்பு அறிக்கை

---

இதனால் அறியத்தருவது,
தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் கீழ் விடுதலைவேண்டும் என்ற நோக்கத்தோடு போராட வந்திருக்கிறோம். கழகம் மக்கள் மத்தியில் வைத்த கொள்கைகளுக்கும், இங்கே நடைமுறையில் இருக்கின்ற கொள்கைகளுக்கும் செயல்பாட்டிற்கும் இடையில் பாரதூரமான முரண்பாடுகள் காணப்படுகின்றன. இது படிப்படியாக கூடிக்கொண்டே செல்கின்றது. எனவே நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சனைகளோடு இவற்றையும் ஒத்தநோக்கின் இயக்கத்தின் பிரச்சனைகளையும் நடைமுறை பிழைகளையும் சீர்திருத்த வேண்டிய இக் காலத்தின் கட்டாயமாகும்.

எனவே எமது கழகம் புனரமைக்கப்பட்டால் தான் நாங்கள் உண்மையான விடுதலையை அடைய முடியும் என்ற நோக்கில் கீழே சில புனரமைப்புச் செய்யவேண்டிய பிரச்சனைகளை வரிசைப் படுத்துகின்றோம்.

1. எமது கட்சியின் சின்னத்தில் "சகல அடக்குமுறைகளையும் உடைத்தெறிவோம் " என்று குறிப்பிடபட்டு இருக்கின்றது. ஆனால் கட்சியில் இருக்கும் சில தோழர்கள் பாட்டாளி'வர்க்க சர்வாதிகாரம்' என்னும் போர்வையில் முதலாளித்துவ ராணுவத்தையும்விட மிக மோசமான முறையில் விசாரணையின்றி சில தனிப்பட்டவர்களின் விருப்பு வெறுப்பிற்கேற்ப தண்டனை வழங்குகிறார்கள். இது சோசலிச கொள்கையை தன் உயிர் நாடியெனக் கொண்டு இயங்குகின்ற நமது கட்சிக்கு பலத்த சேதத்தை விளைவிக்காதா?

2. எமது கட்சியில் அரசியல்பற்றி பேசுபவர்களை சில தோழர்கள் உதாசீனப்படுத்துகிறார்கள். குறிப்பாக எமது கட்சியாலாரம்பிக்கப்பட்ட'எச்' முகாம், தோழர்கள் அரசியல் படிப்பதற்காகவும் நோயாளர்களின் நோயைதீர்ப்பதற்காகவும் தவறுவிடுபவர்களை திருத்துவதற்காகவும் ஆரம்பிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இதைக்கூட மூடப்போகின்ற அதிர்ச்சிதரும் தகவலை அறிந்தோம். எனவே தான் கேட்கின்றோம். அரசியல் எமது கட்சிக்கு என்ன,
விதிவிலக்கா? அல்லது விஷமா?

3. விடுதலைபோராட்டத்திற்கு தங்களை அர்பணித்து வந்திருக்கின்ற போராளிகள் நீண்டகாலமாக பின்தளத்தில் இருப்பதாலும் எமது பின்தளம் அயல் நாட்டில் இருப்பதாலும் அப்போராளிகள் அவ்விடத்தில் சூழலுக்கும் சுவாத்தியத்திற்கும் ஏற்ப மாற்றமடைகிறார்கள். அத்தோடு' PLOT ' என்று பெயர் சூட்டிக்கொண்டு மக்களை தோழர்களை நேசிப்பது குறைவாக இருக்கின்றது. இந்த நடவடிக்கையினூடாக நமது கட்சி மக்களிடமிருந்தும் தோழர்களிடமிருந்தும் அன்னியப்படுவதற்கு சாத்தியகூறுகள்
இருக்கின்றதா? இல்லையா?

4. நமது தமிழீழத்திற்கு அரசியல் தீர்வுகாணப்பட்டு ஒரு சுமூகமான நிலை ஏற்பட்டால் நாம் சரணடைய வேண்டிய நிலையும், போராட்டம் மாறுபடவேண்டிய நிலையும் ஏற்படும் என்பது நமக்கு தெரிந்த விடயமாகும். இப்படியானதொருநிலை ஏற்பட்டால் நமது கட்சி முதலில் தமிழீழத்தில் எந்தவிதமான போராட்டம் நடாத்த வேண்டும்.
சித்தாந்த போராட்டமா,?
ஆயுதப் போராட்டமா?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சித்தாந்த போராட்டம் என்றால் சகல தோழர்களுக்கும் அரசியல் ஞானம் இருக்க வேண்டுமா? இருக்க வேண்டாமா?

5. தமிழீழ விடுதலைக்கும் எமது கட்சியின் வளர்ச்சிக்கும் போராட்டத்தை முன்னெடுக்க பயிற்சி முகாம்களுக்கு வருகின்ற தோழர்களுக்கு சுகையீனமும் உளவியல் ரீதியான அதிருப்தியும் உருவாகின்றது, இதை மாற்றுவதற்கு
அதிகாரத்தை பயன்படுத்துவதா?
அல்லது அவர்களை உணர்பூர்வமாக அணுகுவதா?

6 சோசலிச கொள்கையை கொண்டு செயற்படும் கட்சிக்குள்
ராணுவம் அரசியலுக்கு கட்டுப்படுவதா? அல்லது
அரசியல் ராணுவத்துக்கு கட்டுப்படுவதா?
எனும் ஓர் கேள்வி இன்று புதகரமாக உருவெடுத்துள்ளது. எமது இயக்கத்தில் (அரசியல் பிரிவு, ராணுவப்பிரிவு, செய்தித் தொடர்பு பிரிவு)பல பிரிவுகள் செயற்படுவதால் ஓர் ஒற்றுமையின்மையை கொண்டுவருகின்றது. இக் கேள்விகளையும் அதனால் எழும் முரண்பாடுகளையும் யார் சீர்படுத்துவது? இவ் நிலை கட்சியை வளர்ச்சியடைய செய்யுமா? அல்லது
வீழ்ச்சியடையச் செய்யுமா?

7. நமது கட்சி கொள்கைக்குமாறாக செயல்பட்டால் அதைத்தட்டிக் கேட்கவும் சுட்டிகாட்டவும் உரிமையுண்டெனவும் கட்சியின் கொள்கைதான் கூறுகின்றது. ஆனால் இங்கே பேச்சுரிமைக்கு இடமளிப்பது மிகவும் குறைவாகவே இருக்கின்றது இவற்றை பார்க்கும்போது இப்போக்கு ஒரு முதலாளித்துவ வர்க்க சர்வாதிகாரத்தை மறைமுகமாக எடுத்துக்காட்டுகின்றது. எனவே நாம் இவற்றை
எமது தாய்மையான கட்சியிலிருந்து அகற்றவேண்டும் என்பது
அத்தியாவசியமானதா? அல்லது
அனாவசியமானதா?

மேற்படி இப்பிரச்சனைகள் இங்குள்ளன என்பது தோழர்களின் ஏகமனதான கருத்தாகும். இப்பிரச்சனைகள் கட்சிக்குள் பொதுவாக நிலவுகின்றது. எனவே இந்த அறிக்கை கிடைக்கப்பெற்று (7)ஏழு தினங்களுக்குள் உடனடியாக ஒரு விசாரணைகுழு எங்களைவந்து பார்வையிட்டு பிரச்சனைகளை மிகவும் விரிவாக ஆராயவேண்டும். எனபதை அனைத்து தோழர்களும் மிகவும் அதிகபட்சமான ஆவலோடு எதிர்பார்க்கின்றோம். இந்த அறிக்கை கைக்கு கிடைத்த பின்னால் கட்சி உடனடிநடவடிக்கையில் இறங்கவேண்டும் என்பது எங்கள் கருத்தாக மனதில் கொள்ளப்பட்டு இந்த புனரமைப்பு அறிக்கை தயாரித்து சமர்பிக்கின்றோம்.

இந்த நடவடிக்கைகள் யாவும் "தமிழீழ மக்கள் விடுதலைக் கழக"கத்தின் வளர்ச்சிக்காகவே மேற்கொள்ளப்படுகின்றது என்பதை மீண்டும் மீண்டும் அனைத்து தோழர்களுக்கும் வலியுறுத்துகின்றோம்.

இவ்வண்ணம்,
உண்மையுள்ள கழகத் தோழர்கள்.

**குறிப்பு
இந்தஅறிக்கையில் தோழர்கள் 88பேர் கையொப்பம் இட்டிருந்தனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


இந்த மகஜரை கண்டதும் பயிற்சிமுகாம்களின் பொறுப்பாளராக இருந்த ராஜன் அவற்றை தயாரித்தவர்களெனக் கருதப்படும் சில தோழர்களை உடனடியாக முகாமிலிருந்து புறப்ப பட்டு வருமாறு அழைத்திருந்தார். அவர்கள் அவ்வாறு புறப்பட்டு சென்றால் துன்புறுத்த தப்படலாம் என சக தோழர்கள் பயந்ததால், அவர்களை போகவேண்டாம் என்று அனைத்து தோழர்களும் தடுத்துவிட்டார்கள். அத்துடன் குறிப்பிட்ட தோழர்களை ராஜன் பலவந்தமாக கடத்திச் செல்லலாம் எனக்கருதி அதனைத் தடுப்பதற்காக அருகில் உள்ள சவுக்குத்தோப்பில் தடிகளை வெட்டியெடுத்து இரவுமுழுவதும் அனைவரும் விழித்திருந்து காவல்காத்தார்கள். இதனை அறிந்த ராஜன் அங்குசெல்வதை தவிர்த்தார். மறுநாள் காலை இத்தோழர்கள் உறங்கியிருந்தநேரம் ஆயுதம் தாங்கியகுழு முகாமினுள் நுழைந்து ஆயுதமுனையில் பலரை கடத்திச் சென்றனர். அந்த முகாமை கலைத்துவிட்டு அனைத்து தோழர்களும் விசாரணைக்கு உட்படுத்தப்படுத்தார்கள்.

இவர்களுள் 50 தோழர்கள் விசாரணையின் போது அடித்து துன்புறுத்தப்பட்டார்கள். பின்பு அவர்களுள் 25பேரை கடுமையாக எச்சரித்து பின்பு ஆரம்ப பயிற்சி முகாமிற்கு மீண்டும் பயிற்சிகளை முதலிலிருந்து ஆரம்பிக்குமாறு தண்டனை வழங்கினார்கள். மிகுதி 25பேர் வரை (தோழர் தங்கராசாஉட்பட) மிக மோசமாக சித்திரவதை செய்யப் பட்டார்கள். இவர்கள் சித்திரவதை செய்யப்பட்டதை பார்த்த தோழர் நிரந்தர பைத்தியம் ஆனார். இவர்களை சித்திரவதை செய்தோர் ராஜன், வாமதேவன், பாபுஜி, மாணிக்கதாசன், கந்தசாமி ஆகியோர்.

சித்திரவதையின்போது ஒரு தோழரின் கழுத்து எலும்பு முறிந்தது. பலர் நெஞ்சில் பலமான உட்காயங்களுக்கு உள்ளானார்கள். அனைவரும் குதிக்கால் நிலத்தில் வைத்து நடக்கமுடியா மல் பல மாதங்கள் துன்பப்பட்டார்கள். சிலர் மலசலம் கழிக்க முடியாமல் பல தடவை மருத்துவம் பெற்றார்கள்.

சித்திரவதையின் பின்பு தோழர் தங்கராசா, தமிழன் குரல் பாலசிங்கம் உட்பட 20 பேர் நிரந்தரமாக 6மாதத்திற்குமேல் பயிற்சிமுகாம்களில் சிறைவைக்கப்பட்டு இருந்தா ர்கள். இவர்களுள் தோழர் தங்கராசா தப்பியோடிவிட்டதாக கூறப்பட்டது. இது எந்தளவிற்கு உண்மையென காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

மிகுதியாக சிறைவைக்கப் பட்டிருந்தோரில் சுமார் 15பேர் வரையில் 6மாதங்களுக்கு பின்பு விடுவிக்கப்பட்டு பயிற்சிமுகாம்களில் பயிற்சிகளை தொடர அனுமதிக்கப்பட்டார்கள். 4பேர் வரையில் -சோஸலிசம் சிறி உட்பட - இதுவரை விடுதலை செய்யப்ப டவில்லை. இவர்கள் கொலை செய்யப்பட்டு இருக்கலாம்.

இந்த மகஜரைப்பற்றி உமாமகேஸ்வரன் குறிப்பிடும்போது இது சதி முயற்சியென்றும், இது போன்ற நடவடிக்கைகளுக்கு ராணுவத்தில் இடம்கிடையாது எனவு கூறினார். தோழர் சந்ததியார் இயக்கத்தை உடைப்பதற்கு தூண்டிவிட்டே இதைச் செய்தார் என்று அவர் கூறினார்.

ராணுவத்தில் மகஜர் கொடுப்பது தவறு என்று கருதுமளவிற்கு இவர்கள் ராணுவவிதிகளை கடுமையாக அனுசரிப்பார்கள் எனக்கூறுவதாயின் மக்கள் ராணுவத்தில் ஒரு போராளியின் அடிப்படை ஜனநாயக உரிமைகளான,

1. அரசியல் ஜனநாயகம்
2. பொருளாதார ஜனநாயகம்
3. தலைதலைமையை தேர்ந்தெடுக்கும் ராணுவ ஜனநாயகம்.

ஆகியவற்றை வழங்கி முகாம்களில் கழக ராணுவ நடவடிக்கைகளை சரியான அரசியல் வழிகாட்டலில் விாசிப்பதற்கு அனுமதித்து அவற்றை உடனுக்குடன் திருத்துவதற்கு, தமக்கும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


தலைமைக்கும் இடையில் காணப்படும் கடுமையான பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை நீக்க ஆவன செய்திருத்தல் வேண்டும். அப்படியல்லாது தனிப்பட்டமுறையில் தவறுகளை சுட்டிக்காட்டுவதனால் பழிவாங்கப்படும் சூழ்நிலை தோன்றினால் இது போன்ற மகஜர் கொடுக்கும் போக்குகள் தவிர்க்கபட முடியாதவையே.

இவ்வாறெல்லாம் அந்த தோழர்களின் குரல்களை நசுக்குவதற்கு முனைந்ததேயன்றி கோரிக்கைகளில் நியாயங்களை ஏறிட்டுப் பார்க்கவில்லை. சுமார் ஒருவருடத்துக்கு முன்பு சுட்டிக்காட்டிய குறைபாடுகள் இன்று ஓங்கிவளர்ந்துள்ளன. அவர்களை முகம் கொடுப்பதை உமாமகேஸ்வரன் வேண்டுமென்றே தவிர்த்துவிட்டார்.

சிவனேஸ்வரன் – உடுவில் .
- - - - - - - - - - - - - - - -

இவரது குடும்பத்தார் கழக ஆரம்பநாள் தொட்டே உமாமகேஸ்வரனுக்கு பல வழிகளில் உதவியவர்கள். இவரைக் காணவில்லையெனவும், இவரை கண்டுபிடிக்க உதவுபடியும் இவரது சகோதரியொருவர் உமாமகேஸ்வரனை கெஞ்சிக்கேட்டு கடிதம் எழுதியிருந்தார். இக்கடிதத்தை மத்தியகுழுவில் படித்துக்காட்டி சிவனேஸ்வரனுக்கு என்ன நடந்தது என்று தனக்கு தெரியவே தெரியாது என உமாமகேஸ்வரன் சாதித்தார். சிவனேஸ்வரனின் அண்ணி வந்தபோது அவரை உமா சந்திப்பதற்கு அக்கறை எடுக்கவில்லை.

அண்மையில் சித்திரவதை முகாமொன்றிலிருந்து தப்பி வந்த தோழர்
கூறிய விடயங்களை அப்படியே தருகின்றோம்.
- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

மனித வதைமுகாமிற்கு அழைத்து வரப்பட்ட காலம் 84,ஒக்டோபர் மாதம் 2வது வார இறுதியில் இரவு 12மணியளவில் லொறி ஒன்றில் கந்சாமி அழைத்துவந்தார். கைகள் பின்புறமாக கட்டப்பட்டு கால்கள் கட்டப்பட்டு முகம் மூடிய நிலையில் கொண்டுவரப்பட்டார் லொறி முகாமிற்குள் பிரவேசித்ததும் லைட்கள் ஓவ் செய்யப்பட்டன. பாலசுப்பிரமணியம் எனப்படும் சமூகவிரோதி அடைக்கப்பட்டிருந்த தனிக்குடிலின் தாழ்பாளால் முழுமையாக மூடப்பட்ட உள்ளுக்குள் அடைத்து வைக்கப்பட்டார். மணியம் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டார். சிவனேஸ்வரனின் கைகள் கம்பம் ஒன்றுடன் பின்புறமாக இழுத்து கட்டபட்டு இருந்தது.. இந்தநிலையில் இருக்கவோ, படுக்கவோ முடியாது

சிவனேஸ்வரனுக்கு செய்யப்பட்ட சித்திரவதைகள் மிகக் கொடூரமானவை. அவரை குடிலிலிருந்து எக்காரணத்தைக் கொண்டும் வெளியில் எடுக்கவில்லை. இயற்கை கடன்களை 8'x' பரப்புடைய அக்கொட்டிலிலேயே கழிக்க வேண்டிய சூழ்நிலையில் இருந்தார். அடிக்கடி கேட்கும் அவலக்குரல்கள் சித்திரவதையின் கொடூரத்தை வெளிப்படுத்தின. எனினும் நான் தற்செயலாக பார்க்க நேர்ந்த அல்லது ஏனைய தோழர்கள் பார்த்தவற்றை இங்கு தருகின்றேன். அவர் அழைத்துவரப்பட்ட அன்று அதிகாலை முகாம்பொறுப்பாளர் ரவி பெரிய குண்டாந்தடியுடன் உட்சென்று அவரைதாக்கினார். (குறிப்பிட்ட முகாம் அடிப்படை ராணுவப் பயிற்சிகளை அளிக்கும் முகாமாகும். எனவே புதிதாக வந்த எவரிற்கும் நிரஞ்சனைப்பற்றி தெரிவதற்கு வாய்பில்லை. உள்ளே இருப்பவர் சி.ஐ.ஏ உளவாளி என்ற வதந்தி பரப்பப்பட்டது. குடிலினுள் ஒருவரும் அனுமதிக்கப் படவில்லை) தாக்கும் பொழுது ரவி "டேய் நீ பெரியய்யாவிற்க்கு என்ன செய்தனி" என்று கேள்வி கேட்டபடி தாக்கினான். அதற்கு நிரஞ்சன் " டேய் ரவி அடிக்காதேடா இவ்வளவுகாரம் என்னிடம் பழகிவிட்டு என்னை இப்படி சித்திரவதை செய்கிறியே " என்று அழுதார். இதிலிருந்து நான் சில விடயங்களை அனுமானிக்கக் கூடியதாக இருந்தது. (எனக்கு அவர் அழைத்து வரப்பட்டதிலிருந்து 2-3 நாட்களின் பின்னர்தான் அழைத்து வரப்பட்டது நிரஞ்சன் எனத்தெரியும். நிரஞ்சன் உறுதிப்படுத்தப்பட்ட படியால் ஆரம்பத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



திலிருந்தே நிரஞ்சன் என்ற பெயரை உபயோகிக்கின்றேன்.) நிரஞ்சன் அழைத்துவரப் பட்டிருப்பது, நிரஞ்சனுக் கும் கட்சிக்கும் இடையிலான பிரச்சனை அல்ல இது தனிப்பட்ட உமா- சிவனேஸ்வரனுக்கும் இடையிலான பிரச்சனை என்பது புரிந்தது. தவறுதலாக நிரஞ்சன் தன்னை விசாரிப்பவர்களை அண்ணா, தோழர் என்று அழைத்துவிட்டால் கொடூரமாகத் தாக்கப்பட்டு ஐயா, சேர் என்று அழைக்கும்படி வற்புறுத்தப்படுவர்; பாட்டாளிவர்க்க அரசின் மூலம் பொதுவுடமை சமுதாயத்தை படைக்க புறப்பட்ட சோசலிஸ்டுகள்.

சில நேரங்களில் அவர் தலைகீழாக கட்டிதொங்கவிடப் பட்டிருந்தார். AIR RIFLEஇனால் சுடுதல் அடிச்சன்னங்கள் தசையை தைத்தவுடன் பிளேட்டினால் கீறி அதை எடுப்பார்கள். எனினும் இவற்றைவிடக் கொடுமையான சித்திரவதைகள் நடந்தன. வீறிட்டழும் அவலக்குரல் இதனை நிரூபிக்கும். வெடிமருந்தை குடிலின் அருகாமையில் வெடிக்கவைத்து அதிர்சியடையச் செய்வார்கள்.

இவரை அடித்து துன்புறுத்தியவர்கள்.

1. மூர்த்தி (சுழிபுரம்)
2. இடிஅமீன் (அச்சுவேலி)
3. குகன் (மாதகல் )
4 சி.ரவி (சுழிபுரம் )
5 வாமதேவன் (இவர் ஏ.கே.47 ரைபிளால் சுடுவேன் என்று பயமுறுத்துவார். ரிவால்வரை தலைக்கு அருகாமையில் வைத்து சுடுவார்)

வாக்குமூலம் பதிவு செய்தவர்கள். (வாக்குமூலம் கசட்டிலும் பதிவு செய்யப்பட்டது.)

1. வேந்தன் (நெல்லியடி)
2. அசோக் (பண்டத்தரிப்பு)

மருத்துவம்:-

1. குமார் (மட்டக்களப்பு)

எடுபிடி வேலைகள்:-

1. நாதன் (வவுனியா-முகாம் களஞ்சியம்)
2. நாதன் (வவுனியா-ஓரத்தநாடு தலைமை களஞ்சியம்)
3. மகேஷ் (கிளிநொச்சி)

நிரஞ்சன் அக்டோபர் 31ற்கு முன் திடீரென காணாமல் போனார். சில நாட்கள் கழித்து வாமதேவனிடம் நான் எனக்கு எதுவும் தெரியாததுபோல் பத்திரிகையில் வந்த செய்தியின் அடிப்படையில் சிவனேஸ்வரன் எங்கேயெனக் கேட்டேன். அதற்கு அவர் " நிரஞ்சன் மெட்றாசில் இருக்கிறார் " என்றார். இந்தத்தோழனையும் எம்மைபெற்றவளைப்போல ஒரு தாய்தான் பெற்றாள் அது மட்டுமன்றி முருந்தனை வீட்டில் வைத்திருந்ததினால் தனது அக்காவின் கணவரை பறிகொடுத்தவர் (ராணுவத்திடம்) நிரஞ்சன். இத்தோழனின் மறைவு இக்கொலை பாதகர்களின் கொடூரச் செயலுக்கு நேரடிச் சான்று.

தோழர் அகிலன்.

கழகம் தனது ஆரம்ப நாட்களில் பல அவதூறுகளை முகம்கொடுத்தே வளரவேண்டியிருந்தது. அந்த நேரத்தில் புதிய பாதை வேலைகளுடன், கழகத்திற்கெதிரான அவதூறுகளையும் முகம் கொடுத்தோரில் தோழர் அகிலன் முதன்மையானவர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இதன் காரணமாக இவரது உயிருக்கு அப்போது ஆபத்துக்கள் எதிர்கொண்டன.

இவர் கடந்த காலங்களில் கழக நடவடிக்கைகளில் அதிருப்தியுற்று ஒதுங்கியிருந்தார். தமிழ் நாட்டில் கல்வி கற்பதற்கு முயன்றார். இவரை கழக உளவுப்படையினர் கடத்தினர்

மிகுதி விபரங்களை தப்பிவந்த தோழர்
சொல்லுகின்றார்:-

"இவர் நிரஞ்சனுடன் அழைத்து வரப்பட்டார். ஆரம்பத்தில் கைகள், கால்கள் கட்டப்பட்டு முகாம் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தார். பின்னர் தனியாக ஒரு குடிலுக்கு மாற்றப்பட்டார். குடிலைச் சுற்றி 6-8பேர் வரை நிறுத்தப்பட்டனர். பகல் 3பேர் வரை. விசாரணையின்போது விசாரிப்பவர் பின்னால் வர 5-6பேர் வரை வளையமிட்ட படி தடிகளுடன் குடிலினுள் பாய்ந்து தாக்குவர். இவரை கைகள் விலங்கிடப்பட்டு(பின் புறமாக) முகம் மூடப்பட்ட நிலையில் கொடிக்கம்பத்தை சுற்றி ஓடவிட்டு, அவ்வாறு ஓடும்போது பின்னால் மனிதத்தை கொட்டான் ஒன்றுடன் அடித்துக்கொண்டு ஓடவிட்டனர். மனிதம்(சமூகவிரோதி) பலமாக அடிக்கவில்லை யெனின் மனிதத்திற்கு அடிவிழும். மேலும் அவ்வாறு ஓடும்போது Air Pistol இனால் சுடுவர். அசிலன் 31ம் திகதிவரை இருந்தாரெ ன்பது நிச்சயமில்லை. ஏனெனில் நான் இறுதியாக அவரை பார்க்கவில்லை.

இவரை விசாரணை செய்தவர்கள்.

1. மூர்த்தி(சுழிபுரம்)
2. இடிஅமீன்(அச்சுவேலி)
3. குகன் (மாதகல்)
4. அசோக்(பண்டத்தரிப்பு)
5. சி.ரவி (சுழிபுரம்)

வாக்குப் பதிவு:-

1. ரூபன் (நெல்லியடி)
2. அசோக் (பண்டத்தரிப்பு)

மற்றும் இவரது தேவைகளிற்கு ஓரளவு, கடுங்காவலிலும் வெளிச்செல்ல அனுமதித்தனர். எனினும் இயற்கை கடன்களை கழிக்க சில நேரங்களில் அனுமதிக்கப்படவில்லை.
அசிலன் ஆசிரியரிடம் கேட்ட கேள்வி விபரங்களில் எனக்கு கேட்ட சில

பயிற்சிமுகாமில் இருந்து தப்பியோட முயன்ற பிடிபட்ட
தோழர்கள் நால்வர்.

தப்பி வந்த தோழர் சொல்கிறார்,

"அக்டோபர் 31ற்கு முன் ஒருநாள் பகல் நேரம், வில்லியம், ஜிம்மி, எட்வேர்ட், கடைா ஆகிய நால்வரையும் புதிதாக முகாமிற்கு வரும் தோழர்களுடன் கழக வாகனில் அழைத்துவரப் பட்டனர். வந்தவுடன் இவர்கள் நால்வருக்கும் மொட்டை அடிக்கப்பட்டு தனிக் குடிலினுள் கட்டப்பட்டு அடைக்கப்பட்டனர். மறுநாள் மாலையில் ஒவ்வொருவராக தோழர்கள் முன் னிலையில் குதிக்கால்களில் தடியால் அடிக்கப்பட்டனர். குதி வீங்கிவெடிக்கும் வரை இவ்வா [illegible] அடிக்கப்பட்டது. பின்னர் கொடிக்கம்பத்தை சுற்றி ஓடவிட்டனர். அவ்வா று ஓடும்போது Air Rifle இனால் சுடப்பட்டனர். தொடர்ச்சியாக 4-5 நாட்கள் சித்திரவதை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தொடர்ந்தது. தலைகீழாக இருட்டறையில் கட்டி தொங்கவிடப்படல், திடீர் திடீரென்ன தாக்குதல் போன்றவை. இவர்களில் வில்லியம் என்பவர் LTTE யிற்கு இத்தாலியில் வேலை செய்தவர் என்பதும், LTTE உளவாளியாக ஊடுருவினார் என்றும், கழகத்தின் ராணுவக்குறிப்புக்கள் வெளியே போய்விட்டதாகவும், மிகுதி மூவரையும் அழைத்துக்கொண்டு BOMBAY போவதாக ஏமாற்றி அழைத்துச்சென்று LTTE ல் இணைப்பதே அவரதுவேலை என்றும் தெரிவித்துள்ளாரென மிகமுக்கியமான அவர்களை விசாரித்த ஒருவர் எனக்கு இதை மிகவும் ரகசியமாக தெரிவித்தார். ஒரு நாள் இரவு வாமதேவன் வந்து ஒவ்வொருவராகக் களஞ்சிய அறையினுள் கொண்டுவரப்பட்டு கொடூரமாக சித்திரவதை செய்தனர். மிளகாய்த்தூளை கண்களில் போட்டனர். பின்னர் கொடிக்கம்பத்தை சுற்றி ஓடவிட்டு ஒவ்வொருவராக தாக்கப்பட்டனர். அன்று இரவு 10மணிக்கு வந்த வாமதேவன் அதிகாலை 4மணிக்கு மோட்டார் சைக்கிளில் திரும்பிச் சென்றார். அன்று இறுதியாக 3.30மணியளவில் பயிற்சி ஆசிரியர் தவம்(மானிப்பாய் தவசீலன்)வில்லியமை இறுதியாக தாக்கியதில் இறந்துவிட்டார். நிற்கவேமுடியாத எட்வேட்டை வில்லியமை தூக்கிச் செல்லும்படி வற்புறுத்தினர். மறு நாள் மிகுதி மூவரும் அப்புறப்படுத்தப் பட்டனர்.

இவர்களின் விபரம்.

1. ஜிம்மி (மூர்த்தியின் உறவினர்)
2. பகீரதன் (கனடாவிலிருந்து வந்தவர் )
3. எட்வேர்ட் (பிரான்ஸிலிருந்து வந்தவர் )
வில்லியம் (இத்தாலியிலிருந்து வந்தவர் )

இவர்களை சித்திரவதை செய்தவர்கள்.

1. மூர்த்தி (சுழிபுரம் )
2. சி.ரவி (சுழிபுரம் )
3. இடிஅமீன் (அச்சுவேலி )
4. குகன் (மாதகல் )
5. வாமதேவன் (தெல்லிப்பளை )
6 தவம் தவம் (மானிப்பாய் )

வாக்குப்பதிவு.

1. அசோக் (பண்டத்தரிப்பு )

மருத்துவம்.

1. குமார் (மட்டக்களப்பு )

ஈடச்சன்னங்கள் கீறி எடுக்கப்பட்டன. வெடிகுண்டின் தகரத்துண்டுகளும் உடலில் இருந்தன"

"நான் வேறு ஒரு முகாமிற்கு சென்றுவிட்டேன். பின்னர் நான் சேகரித்த தகவலின்படி

1. அன்ரனி(கிளிநொச்சி)
2. வசந்தன் (திருநெல்வேலி )
3. ராஜன் (மட்டகளப்பு )

ஆகியோர் ஜிம்மி அவர்களின் விவகாரத்தில் அவர்களுக்கு உதவி செய்ததாகவும், அவர் கம்பத்திலிருந்து ஓட தீர்மானித்தது முதலில் தெரிந்திருந்தும் வெளிப்படுத்தாதது என்ற பெயரில் கைது செய்யப்பட்டு, 24மணி நேரம் தொடர்ந்து அடிக்கப்பட்டனர். இவர்கள் அடைக்கப்பட்ட வேளையில் சீலன் கொண்டுவரப்பட்டு மிருகத்தனமாக சித்திரவதை செய்யப் பட்டவேளையில் இறந்தார். அன்று இவர்கள் மூவரிற்கும் உணவுடன் தூக்க மருந்து கொடுக்கப்பட்டது. இவ்வுணவை அருந்தாமல் இருந்த ஒருவர் சீலனை புதைக்கச் சென்றதை கண்டிருக்கிறார். இதற்கான ஆதாரம் சீலனிற்கு பாதுகாவலாக இருந்த

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒருவரின் மூலமும், அம்மருவரின் ...வர் மூலமும் அறிந்தேன். "

ரமேஷ் எனப்படும் மகேந்திர... ( திருகோணமலை )
--------------------------------------------------

தப்பிவந்த தோழர் சொல்கிறார்,
"முன்னாள் 'ஜே8 முகாம் பொறுப்பாளரும், தங்கராசா 'ஜே' முகாமிலிருந்து தப்பி யோடியபோது அம்முகாமில் பொறுப்பாளராக இருந்தவருமான ரமேஷ் என்று அழைக்கப்படும் திருகோணமலையைச் சேர்ந்த மகேந்திரன் 'எவ்' முகாமிலிருந்து ஒரத்தநாடு அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டு, செந்தில் (மதிவாணன் ) மூலம் முகாமிற்கு உம்மை பயிற்சி ஆசிரியராக அனுப்புகிறோம் என்று கூறப்பட்டு கடிதத்தை அவரது கையிலேயே கொடுத்து அனுப்பி வைக்கப்பட்டார். 'பி' முகாமின் பொறுப்பாளர் அக்கடிதத்தை படித்துவிட்டு, மகேந்திரனின் இரண்டு கைகளையும் விலங்கிட்டு இருட்டறையில் கொடூரமாக தாக்கிச் சித்திரவதை செய்து பற்கள் முழுவதும் நொருக்கப்பட்டு நடக்க முடியாத நிலைக்கு உள்ளாக்கப்பட்டார். அவரை அங்கு சந்தித்த எனக்கு அவரிற்கு வேண்டிய ஒருவர், அவரது நிலமையை எனக்கு விபரித்தார். இவர் சென்றவுடன் ரமேஷ் இவரைக்கட்டி பிடித்து அழுததாகவும், நிச்சயம் விடிவு வரும் என்ற நம்பிக்கையுடன் தான் வாழ்வதாகவும் தெரிவித்ததாக அறிந்தேன். இறுதியில் அவர் காணாமற் போனவரானார் "

## தோழர் சந்திரன்.

தோழர் சந்திரன் ஒரு வருடத்துக்கு மேலாக மத்தியகுழுவில் இடம் பெற்றவர். தமிழீழத்தில் ராணுவபொறுப்பாளராக பணியாற்றினார்.

இவர் கழக நடவடிக்கைகளையும் தலைமையின் தவறான போக்குகளையும் விமர்சித்தார். இதனால் இவர் "வசந்தனின் ஆள் " எனச் சந்தேகிக்கப்பட்டார். கழக படைத்துறை செயலரான கண்ணன் அவர்கள் தமிழீழம் சென்றபோது தோழர் சந்திரனை சந்தித்து அவருக்கு சில புதிய பொறுப்புக்கள் வழங்கப்பட இருப்பதாகவும் அவை பற்றி நேரில் உமாமகேஸ்வரனுடன் நேரில் பேசுவதற்கு தமிழகம் செல்லுமாறு கேட்டிருந்தார். இதற்கிணங்க இவர் தமிழகம் சென்றார். அங்கு கந்தசாமியால் கைது செய்யப்பட்டார். தான் உமாமகேஸ்வரனின் கட்டளைக்கிணங்கவே கைதுசெய்வதாக கந்தசாமி தோழர் சந்திரனை கைது செய்யும்போது கூறினார்.

இவர் கைது செய்யப்பட்டதை அறிந்த தோழர் காந்தன் கந்தசாமியிடம், தோழர் சந்திரன் மத்தியகுழு உறுப்பினர் எனவும் அவரை கைது செய்யும் அதிகாரம் கந்தசாமிக்கு கிடையாது எனவும் அவ்வாறு செய்தால் பல மோசமான பின் விளைவுகள் ஏற்படுத்தும் எனவும் எச்சரித்தார். இதற்கு கந்தசாமி பதிலளிக்கையில் தான் தவறுதலாகவே கைது செய்யநேர்ந்ததாகவும் தான் உமாமகேஸ்வரனிடம் தொடர்பு கொண்டுவிட்டு விடுதலை செய்வதாக கூறினார். அத்துடன் தோழர் சந்திரன் 'இந்திரா காந்தி அஞ்சலி விமர்சனம் ', தமிழன்குரல்விமர்சனம்' ஆகியவற்றுடன் சம்மந்தப்பட்டவரென குறிப்பிட்டிருந்தார். இதனை கடுமையாக ஆட்சேபித்த தோழர் காந்தன் தாபன நடவடிக்கைகளை விமர்சிப்பது கழக மத்தியகுழு உறுப்பினர்களது அடிப்படை உரிமையெனவும், அதனைத்தடுக்கும் உரிமை உளவுத்துறைக்கோ, செயலதிபர்க்கோ கிடையாது எனக் குறிப்பிட்டார்.

இவர் தொடர்ந்து 6 நாட்கள் (நவம்பர் 10-16ம் திகதி வரை -1984 ) சித்திரவதைக் கொட்டகையில் கையும் காலும் கட்டப்பட்ட நிலையில் அடைக்கப்பட்டிருந்தார். பல தடவைகள் ...க்கப்பட்டார். மோசமான வார்த்தைகளால் தூற்றப்பட்டார். மிக மோசமானமுறையில் ஆ...க்கப்பட்டார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இங்கு இருந்தபோது இலக்கம் 75. ஒவ்வொரு அரைமணி நேரத்திற்கும் ஒருதடவை கைதி இலக்கம் 75என்று உரத்தசத்தமிட்டு அழைப்பார்கள். அதற்கு 'ஆஜர்' என பதிலளிக்க வேண்டியிருந்தது. பல தடவை அவரது உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தபோவதாக மிரட்டினார்கள்

இவர் கைது செய்யப்பட்டு சிறைவைக்கப்பட்டிருந்தபோது பின்வருவோர் அவருடன் கூடவே சிறை வைக்கப் பட்டிருந்தனர். சதீஸ், ஜிம்மி, கனடா(கோண்டாவில்) ஆகியோர்.

இவர்களில் ஜிம்மி, கனடா ஆகியோர் கொலைசெய்யப்பட்டுவிட்டதாக இறுதியில் கிடைத்த தகவல்கள் கூறுகின்றன. சதிஸ்க்கு என்ன நடந்ததென்று நிச்சயமாகத் தெரியவில்லை. அநேகமாக கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்றே கருதுகிறோம்.

சிறைவைக்கப்பட்டிருந்தபோது வாமதேவன் இவரிடம் இவர் மத்தியகுழு உறுப்பினர் ஆகையால் உமாமகேஸ்வரனே நேரடியாக வந்து விசாரணை செய்யவுள்ளதாக குறிப்பிட்டார். ஆறு நாட்களின் பின் கந்தசாமியால் விடுதலை செய்யப்பட்டார். அவர் விடுதலை செய்யும் போது உமாமகேஸ்வரன் கைது செய்தமைக்கான காரணங்களை விளக்குவார் எனக் குறிப்பிட்டார்.

ஆனால் உமாமகேஸ்வரனை நேரில் கண்டபோது தோழர் சந்திரன் இது பற்றி வினவிய போது ஏதும் பேசாது மௌனம் சாதித்தார். கழக படைத்துறைச் செயலரிடம் இது பற்றி நேரில் சந்தித்து கேட்டபோது தனக்கு ஏதுமே தெரியாது என்று சாதித்துவிட்டார்.

பெப்பிரவரி 08,1985 அன்று நடைபெற்ற மத்தியகுழுக் கூட்டத்திற்கு முன்பு தோழர் சந்திரன் ஏனைய மத்தியகுழு உறுப்பினர்களை தனிப்பட்ட முறையில் சந்தித்து தனக்கு நேர்ந்த அநுபவங்களை பற்றி கூறினார். இதனைக் கேட்டவர்கள் ஒவ்வொருவரும் தமது பாதுகாப்பிற்கு இனிமேல் கழகத்திற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது என கொதிப்புற்றார்கள். இது பற்றியும் சுழிபுரம் கொலை பற்றியும், சிவனேஸ்வரன் கொலை பற்றியும் செயற்குழு கூட்டத்தில் தாம் கேள்விகளை எழுப்ப விரும்பினார்கள். ஆனால் மத்திய குழுக்கூட்டத்தில் உமாமகேஸ்வரனும் அவரது அடியாட்களும் நடந்து கொண்ட விதத்தில் இந்த பிரச்சனைகளை அங்கு எழுப்பினால் தமக்கும் அதே கதிதான் நடக்கும் என பயந்து வாயை மூடிக்கொண்டார்கள். "அனைத்து அடக்கு முறைகளையும் தகர்த்தெறிய" புறப்பட்ட போராளிகள் பாவம் தமது கண்ணெதிரே சொந்த தாபனத்தில் நடக்கும் அநீதிகளை தட்டிக்கேட்க பலமில்லாது தலைகுனிந்து மனம் நொந்தார்கள்.

தமிழீழ ___ அபிமானிகளே.

உங்கள் கண்முன்னாலேயே உமாமகேஸ்வரனின் [illegible] செய்யும் அடாவடித்தனங்களை கண்டு கொள்ளுங்கள். தவறான தலைமைக்கு எதிரான எமது போராட்டத்திற்கு ஆதரவு தாருங்கள்.

இந்த அராஜகங்களை வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கமுடியாது. ஏனெனில் நாளை மலரப் போகும் தமிழீழத்தில் இவர்களே பொலிசாராக, இராணுவமாக எமது வீட்டு வாசல்களில் நின்று அராஜகம் புரிய ஆரம்பிக்கப் போகின்றார்கள். ஆதலால் இன்றே இதனை அம்பலப் படுத்தி நிராகரிக்க வேண்டியது அவசியமானது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழீழ அபிமானிகளே,
உமாமகேஸ்வரன் இவ்வாறு தொடர்ச்சியாக நடாத்தும் படுகொலையையும், அராஜகத்தையும் முடிவிற்கு கொண்டுவந்து இளைய தலைமுறைகளையும், உங்கள் குழந்தைகளையும் இவ் அராஜகத் காக்குழகமாக கழகத்திற்கு பயிற்சி பெற வந்தவர்களில் பயிற்சியின் போது ஓடிப்போனவர்கள், பயிற்சி முகாம்களில் தற்கொலை செய்துகொண்டோர், இவர்களால் மரணதண்டனை வழங்கப்பட்டோர் ஆகியோரது பட்டியல்களை பகிரங்கப்படுத்தும்படி கோருங்கள். இதன் மூலம் உங்கள் குழந்தைகள் பயிற்சி முகாமில் உயிரோடுதான் இருக்கின்றார்களா என்பதனை உறுதி செய்து கொள்ளுங்கள்.

நமது
தந்தையர் நாட்டு மண்மீது
சிவப்பு ரத்தத்தை
சிதற வைத்தவர்களுக்கு
தண்டனை அளியுங்கள் !

யாருடைய
ஆணையின் பேரில் இந்த
அக்கிரமங்கள் நடந்தனவோ
அந்த துரோகிகளுக்கு
தண்டனை அளியுங்கள் !

இந்த சவங்களின்மீது
சிம்மாசனம் ஏறிய
அந்த துரோகிகளுக்கு
தண்டனை அளியுங்கள் !

மறப்பவர்களுக்கும்
இந்த கொடுமைகளை
மன்னிக்கச் சொல்பவர்களுக்கும்
தண்டனையளியுங்கள்

நான்
எல்லோருடனும்
கைகுலுக்க விரும்பவில்லை
ரத்தக்கறை படிந்த
கரங்களை
தொடுவதற்கே விருப்பமில்லை
நான்
தண்டனை கோருகின்றேன்---------!.

- பாப்லோ நெருடா -

TAMILS FOR A DEMOCRATIC EELAM
B.M BOX 4338
LONDON WC1N 3XX.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்